126

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNP 5336/ESU3136- விசேட தேவைகள்சார் கல்வி அடிப்படை

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 31.07.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

01. மாறுபட்ட அல்லது பல்வேறு கல்விசார் தேவைகளுக்குட்பட்ட வகுப்பறைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கல்வித்தத்துவம் ஏன் முக்கியத்துவம் வாயந்தது என்பதற்கான ஐந்து (5) நியாயப்படுத்தல்களை குறிப்பிடுக.
02. மரியா மொன்ரிசொரியின் கல்வித் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஐந்தினை (5) குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு விசேட கல்விசார் தேவைகளுடைய ஓர் மாணவனின் உட்படுத்தல் கல்வியில் நடைமுறைப்படுத்த முடியும் என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
03. உள்ளடங்கல் கல்வியில் சுற்றுச் சூழல் தேவை என்றால் என்ன? என்பதனை உதாரணத்துடன் சுருக்கமாக விபரிக்குக.
04. தாராளவாத முன்னோக்குகளுக்கிணங்க கல்வியின் பிரதான தொழிற்பாடுகளை உதாரணங்கள் மூலமாக விளக்குக.
05. கல்வி முறைமையில் விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் உள்வாங்கலை சுருக்கமாக விளக்குக.
06. இலங்கை பாடசாலை முறைமையில் விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் உள்வாங்கலை மேம்படுத்தும் நோக்கில் செயற்படும் குழுவினருக்கான ஐந்து (5) பரிந்துரைகளை பட்டியற்படுத்துக.
07. பல்வேறு கல்விசார் தேவைகளுக்குட்பட்ட அல்லது மாறுபட்ட வகுப்பறைகளின் கல்வியை மேம்படுத்துவதில் ஏற்புடையதாக காணப்படும் ஜீன் ஜக் ருசோவின் கொள்கைகள் மூன்றினை குறிப்பிடுக.
08. யுனெஸ்கோவினால் முன்வைக்கப்பட்ட கல்வி அறிவுசார் தூண்கள் நான்கினை (4) குறிப்பிட்டு அவற்றுள் விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களுக்கு மிகப் பொருத்தமான ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(08 x 05 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. i. விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதில் கல்வித்தத்துவங்கள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் என்பது ஓர் இடமோ அல்லது நிகழ்ச்சித்திட்டமோ அல்ல மாறாக ஓர் சித்தாந்தம் அல்லது தத்துவமாகும். இவ் தலைப்பில் கல்விசார் சஞ்சிகை ஒன்றிற்கு ஓர் கட்டுரை எழுதுக.(சொற்கள் வரையறை 250.)

(12 புள்ளிகள்)

10. i. மாறுபட்ட சிறுவர்களின் கல்வியில் பிரயோகிப்பதற்கு மிகப் பொருத்தமானதாக கருதப்படும் கல்வித் தத்துவங்கள் அத்துடன் கொள்கைகள் குறைந்தது மூன்றினை (3) சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. இலங்கை கல்வி முறையில் விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஒருங்கிணைந்த கல்வி முறை எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பதனை விளக்குக.

(12 புள்ளிகள்)

11. i. மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஏற்புடையதாக உள்ள கல்வி முறையின் மூன்று (3) பிரிவுகளையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. விசேட கல்விசார் தேவைகளையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதில் முறைசாரா அத்துடன் முறையியல் கல்வியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

12. i. பிளோட்டோவினால் முன்வைக்கப்பட்ட கல்வி முறைமையினை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் கல்வியில் வாழ்நாள் நீடித்த கல்வி எவ்வாறு முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

13. i. விழுமியக் கல்வி முறையினை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. இலங்கையில் உள்ளடங்கல் கல்வி முறைமையை மேம்படுவதில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

14. i. குறைபாடுகளுடன் கூடிய மாணவர்களுக்கான விசேட தேவைகள்சார் கல்வி எனும் எண்ணக்கருவினை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு உள்ளடங்கல் கல்வி ஏன் அதிகம் சிபார்சு செய்யப்பட்ட முறைமையாக காணப்படுகின்றது விளக்குக.

(12 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது